# கற்பகம்
திங்கள் இதழ்
Kutpakam
விலை ரூபா 10.00


## குறளமுதம்-82

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-9 அறத்துப்பால் விருந்து ஓம்பல்**

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று

உண்ணப்படும் பொருள் சாவா மருந்தே ஆனாலும் விருந்தினரை வீட்டுக்கு வெளியே வைத்துவிட்டு, தான் மட்டும் உள்ளிருந்து தனித்து உண்ணுதல் விரும்பத் தக்கதன்று.


மலர்-07 | மார்ச்-2015 | இதழ்-82


★ வடமாகாணத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் ★

# பணியாளருக்கு வேதன அதிகரிப்பு! உறுப்பினருக்கு மரணக் கொடை!

## வடக்கு கூட்டுறவு அமைச்சர் அறிவிப்பு!



பனைத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்களைப் போன்றே தொழிலின்போது உயிராபத்துக்களை எதிர்நோக்குபவர்களாக உள்ளனர். ஒவ்வொரு வருடமும் பனையிலிருந்து தவறி விழுந்து பலர் மரணிக்கின்ற செய்திகளை நான் பத்திரிகை வாயிலாக அறிந்துகொண்டு மனம் வேதனையடைகின்றேன். இத்தொழிலுக்கு முழுமையான பாதுகாப்பும் காப்புறுதியும் மிகவும் அவசியமானதொன்றாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் திரு பொ.ஐங்கரநேசன் அவர்கள்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7ம் பக்கம் பார்க்க)

# சேவை நலன் பாராட்டும் வரவேற்பும்



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ். மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பணியாற்றிய திரு வீ.கே. அருந்தவநாதன் அவர்கள் இம்மாதம் முதல் கிளிநொச்சி மாவட்டத்துக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக மாற்றலாகி செல்வதை முன்னிட்டு அவருக்கான சேவை நலன் பாராட்டு விழாவையும் வடக்கு மாகாண (2ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு ஊழியர் வேதனம்; சுற்றுநிருபம் அனுப்பி வைப்பு

வடக்கு மாகாண கூட்டுறவு அமைப்புக்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் இவ்வருடம் தை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 30 வீத சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கூட்டுறவு நிறுவனங்களைக் கோரும் சுற்றுநிருபம் ஒன்று வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் செயலாளரால் சகல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. (2ம் பக்கம் பார்க்க)

## சகாயநிதியத் திட்டம்; ஏப்ரல் முதல் நடைமுறை

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தமது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் சகாய நிதியத்திட்டம் (காப்புறுதி திட்டம்) ஒன்றினை ஏப்ரல் மாதம் 1ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த உரிய அனுமதிகளைப் பெற்றுள்ளது.

பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர், பணியாளர்கள் அவர்சார்ந்த குடும்ப உறுப்பினர்கள், ஏனைய கூட்டுறவு அமைப்புக்களின் அங்கத்தவர், பணியாளர் (8ம் பக்கம் பார்க்க)

## திக்கம் வடிசாலையை புனரமைக்க நிதியுதவி

வடமராட்சி கொத்தணியினால் நிர்வகிக்கப்படும் திக்கம் வடிசாலைக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு மாவை சேனாதிராசா அவர்கள் ஊடாக பிரதமர் நிதியிலிருந்து ரூபா 25 இலட்சம் ரூபாவும், வடமாகாண சபை உறுப்பினர்களான திரு சிவயோகன், திரு பரஞ்சோதி ஆகியோர் தலா 5 இலட்சம் ரூபா வீதமாக வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**சிந்தனைத்துளி**

"வறுமையால் பசித்திருப்பவன் பசியைப் போக்குவதற்காக பாவம், புண்ணியம் பார்க்க மாட்டான்" - அறிஞர்-

# கற்பகக்கரு

## கூட்டுறவு ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு

வடமாகாணத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகள் சிறப்பாக அமைவதற்கு அதனை நிர்வகிக்கின்ற நெறியாளர்குழு உறுப்பினர்களதும் அந்நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களினதும் அர்ப்பணிப்புடனான பணியே காரணமாகின்றது. கூட்டுறவுச் சேவையில் தம்மை இணைத்துக் கொள்பவர்கள் கூட்டுறவு சார்ந்த கல்வி அறிவினோடு அதனை பின்பற்றக்கூடிய ஆற்றலையும் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

வடமாகாணத்தில் வீரசிங்கம் போன்ற தன்னலமற்ற தலைவர்கள் கூட்டுறவில் தம்மை இணைத்துக்கொண்டதன்மூலமே கூட்டுறவு அமைப்புக்கள் சிறப்புப் பெற்றன. இவ் அமைப்புக்களை முன்னுதாரணமாகக் கொண்டே தென்னிலங்கையில் கூட்டுறவு அமைப்புக்கள் தோற்றம் பெற்றதாக அறிகிறோம். ஆனால் இன்று வடமாகாணத்தில் இயங்குகின்ற கூட்டுறவு அமைப்புக்கள் பல விளைத்திறனற்ற செயற்பாடுகள் காரணமாக வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.

இதற்கு பல காரணங்களை நாம் முன்வைக்கலாம். முதன்மையாக யுத்த நிலைமை ஒரு காரணமாக இருந்தது என்பதை தவிர்த்து பார்த்தால், இத்துறை சார்ந்த ஊழியர்களின் வேதனம் போதாமையும் ஒரு முக்கியமான காரணமாக அமைகின்றது. இதனால் வினைத்திறன்மிக்க பணியாளர்கள் கூட்டுறவில் இணைவதற்கு பின்னடிக்கின்றமை, மற்றும் பணியாளர்களின் வருமானம் போதாத காரணத்தினால் கடமையில் அக்கறையீனம், பணியிலிருந்து விலகுதல் போன்ற காரணங்களை கூறலாம்.

கூட்டுறவு ஊழியர்களின் சம்பளமானது கடந்த 2006ம் ஆண்டுக்கு பின்னர் சிறிதளவேனும் அதிகரிக்கப்படவில்லை. இதேவேளை பொருட்கள் சேவைளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருந்தது. இதன் காரணமாக கூட்டுறவுப பணியாளர்கள் கூட்டுறவிலிருந்து விலகிச் செல்லும் நிலையில், அவர்களின் வேதனத்தை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுப்பது அவசியம் என பல தரப்பாலும் கோடிட்டுக் காட்டப்பட்டதன் விளைவாகவும், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் கோரிக்கையினை ஏற்றுக்கொண்டதன் பயனாகவும் வடமாகாண கூட்டுறவு அமைச்சரின் முயற்சியினால் இவ்வேதன அதிகரிப்புக்கான சுற்றுநிருபம் ஊழியர் ஆனைக் குழு ஊடாக அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை கூட்டுறவு ஊழிர்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இச்சுற்றுநிருபத்தை அமுல்படுத்துவதற்கு உரிய அனுமதிகளையும் ஒத்துழைப்பையும் இந்நிறுவனங்களின் பணிப்பாளர்கள் வழங்கி உதவுவார்கள் என கற்பகம் நம்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

## கூட்டுறவு ஊழியர் வேதனம்............ - 1ம் பக்கத் தொடர்ச்சி

வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கமானது கடந்த மே மாதம் மீளவும புனரமைப்புச் செய்யப்பட்டு தனது ஊழியர் நலன் சார்ந்த விடயங்களை கவனத்தில் கொண்டு முதல் நடவடிக்கையாக நீண்டகாலமாக எந்தவித சம்பள அதிகரிப்பும் இல்லாது வாழ்வாதார நெருக்கடியை எதிர்நோக்கும் கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மாநாடு மற்றும் உரியவர்களுடன் பேச்சுவார்த்தை மற்றும் தொடர்பாடல் போன்ற தம்மாலான அனைத்து தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இதன் பயனாக தொழிற்சங்கம் கோரிய 50 வீத சம்பள அதிகரிப்பில் முதற்கட்டமாக 30 வீத அதிகரிப்பை வழங்குவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் உயர்திரு சி.வி.விக்னேஸ்வரன் அவர்களினால் கூட்டுறவு அமைச்சர் திரு பொ.ஐங்கரநேசன் அவர்கள் ஊடாக இவ்வருடம் தை மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பெப்ரவரி 27ம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் ஊடாக அறிவுறுத்தியுள்ளமை கூட்டுறவு ஊழியர்களுக்கு பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் இக்கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் அனைத்து சமாச உறுப்புரிமைச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களை அழைத்து 30 வீத சம்பள அதிகரிப்பினை எமது சங்கங்கள் வழங்கத் தயாராக இருக்கின்றன என்ற தீர்மானத்தை மேற்கொண்டு அதனை இத்துறைசார்ந்தத அனைத்து அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தி இச்சம்பள அதிகரிப்பானது மேற்கொள்ளப்படுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சேவைநலன் ........ 1ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றிய திரு சு.கணேஸ் அவர்கள் புதிய கூட்டு. உதவி ஆணையாளராக பதவியேற்பதை வரவேற்றும் சமாசத்தால் நடத்தப்பட்ட சேவை நலன் பாராட்டும் வரவேற்பு விழாவும் இம்மாதம் 7ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக திரு வீ.கே. அருந்தவநாதனும் அவரின் துணைவியாரும் கலந்துகொண்டதோடு, வாழ்த்துரை வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை தலைவர் திரு இ.இரத்தினம் அவர்கள், புதிய உதவி ஆணையாளர் திரு சு.கணேஸ் அவர்கள், மாவட்ட கூ.சபைத் தலைவர் திரு சி.சுந்தரலிங்கம், சங்கங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் வரவேற்புரை, தலைமையுரையைத் தொடர்ந்து புதிய உதவி ஆணையாளர் அவர்களை சமாசத் தலைவர், பொதுமுகாமையாளர் பொன்னாடை அணிவித்து வரவேற்றதோடு, மாற்றலாகிச் செல்லும் உதவி ஆணையாளர் அவர்களை சமாசத் தலைவர், கொத்தணிகளின் தலைவர்கள், சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவித்ததோடு சமாசத் தலைவர், பொதுமுகாமையாளரினால் "வாழ்நாள் கூட்டுறவாளன்" என்ற பட்டம் வழங்கப்பட்டு பதக்கமும் அணிவிக்கப்பட்டது.

அடுத்து திரு இ.இரத்தினம் அவர்களால் வாழ்த்துரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சமாசம் சார்பாக சேவைநலன் பாராட்டு பத்திரத்தினை அச்சுவேலி சங்க பொதுமுகாமையாளர் திரு கி.வரதராஜன் அவர்கள் வாசித்து வழங்கினார். முன்பள்ளிகளின் சார்பாக 7ம் பக்கம் பார்க்க

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2015ம் ஆண்டின் கல்விச்சுற்றுலாவானது பெப்ரவரி 10,11,12 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பணியாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் என சங்கம் ஒன்றிலிருந்து தலா இருவர் என்ற அடிப்படையில் கொத்தணிகள், சமாசம் என்பவற்றி



# பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் கல்விச் சுற்றுலா

தொகுப்பு கி.வரதன்,
பொதுமுகாமையாளர், அச்சுவேலி

லிருந்தும் அதன் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் உள்ளிட்ட முப்பந்தைந்து பேர் கொண்ட இச்சுற்றுலா குழுவின் சுற்றுலாவானது சமாசத்தின் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் 10ம் திகதி இளங்காலை வேளை 5 மணிக்கு சமாசத் திலிருந்து ஆரம்பமாகியது.

10-02-2015 செவ்வாய்க் கிழமை அதிகாலை 5 மணிக்கு குதூகலம், நம்பிக்கை, தன்னிறைவுடன் ஆரம்பமான கல்விச்சுற்றுலா காலை 8 மணிக்கு முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் இறைவணக்கத்துடன் தொடர்கிறது. சரியாக காலை 9.00 மணிக்கு பஸ் நியைத்தைச் சென்றடைந்தது. முதல்நாள் பயணத்தின் முதல்வேளை உணவினை முறிகண்டியில் முடித்தபின் 9.30 மணிக்கு சுற்றுலா பயணம் தொடர்ந்தது.

முற்பகல் 10.50 மணிக்கு அனுராதபுரம் சென்றடைந்த நாம், இலங்கையில் புத்தமதம் வளர்ச்சியுறக் காரணமாக அமைந்த சங்கமித்தை, தேவநம்பியதீசன் காலத்து வரலாற்றுடன் தொடர்புடைய வெள்ளரசு மரத்தினை தரிசித்துக் கொண்டு அனுராதபுரம் புனித பிரதேசத்தில் எமது சுற்று தொடர்ந்த வண்ணமிருந்தது. ஆயிரங்கால் மண்டபம், பௌத்த விகாரைகள், அநுராதபுரத்தின் தொன்மைச் சின்னங்கள் என நண்பகல் 12 மணி வரை எமது சுற்றுலா அநுராதபுரத்தில் நடைபெற்றது. பின்னர் 12.10 மணிக்கு ஆரம்பமான எமது பயணம் பி.ப. 1.00 மணிக்கு மதிய உணவுக்காக கபறணை பஸ் நிலையத்தில் நின்றது. கபறணை பிரதேசத்தில் ஒவ்வொருவரும் தத்தமது முதலாம் நாள் மதியபோசனத்தை நிறைவுசெய்துகொண்டு சிகிரியா நோக்கிய எம் பயணத்தை ஆரம்பித்தோம்.

கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையாலும் இன்னோரன்ன காரணங்களாலும் சுற்றுலாவில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் தம் கற்பனையிலும் பாடப் புத்தகங்களிலும் பார்த்த அந்த இயற்கையோடு கூடிய சிகிரிய மலைக்குன்று பிரதேசத்தில் பி.ப. 3.30 மணிக்கு சொல்லில் அடக்கமுடியாத மகிழ்ச்சியுடன் கால் பதித்தோம். அகழி, ஆதிகாலக் கட்டடக்கலை, உயரமான மலைச்சிற்பம், ஓவியம், இயற்கை வளம், இளந்தென்றல் என சிகிரிய மண் குன்றையே பார்த்து வியந்து நின்றவேளை, மழை பொழிய ஆரம்பித்தது. எம் சிகிரிய மலைக் குன்று ஏறும் பயணத்திற்கு சிறிது நேரத் தடங்கல் ஏற்பட்டபோதும் மாலை 4.00 மணிக்கு யாவரும் தத்தமது முயற்சிகளுடன் சிகிரியா மலைப்பிரதேசத்தில் தொடர்கின்றோம். பயணக்களை, புதிய இடம், குளவி கொட்டும் கவனம் எனும் எச்சரிக்கை போன்ற எதனையும் பொருட்படுத்தாது ஆர்வமேலீட்டினால் சிரிகியா மலைக்குன்றின் உச்சிவரை சென்று பார்த்து பரவசமடைந்தோம். சிலரால் உச்சி முனைவரை செல்லமுடியாது போனாலும் முழுமையான உயரத்தை அடைந்தவர்கள் கூறியவற்றைக்கொண்டு தாமும் உச்சிவரை சென்ற அனுபவத்தை பெற்றுக் கொண்டனர். சிகிரியா ஓவியம், குன்று, மலைச்சாரல் அனைத்துமே ஆச்சரியம்தான். வரலாற்று சிறப்பு மிக்க சிகிரியாவில் இருந்து மாலை 6.00 மணிக்கு மிக்க மகிழச்சியுடன் விடைபெற்று பயணத்தை தொடர்ந்தோம்.

முதல்நாள் சுற்றுலாவின் இரவுநேர உணவுக்காக இரவு 9.30 மணிக்கு மகியங்கனை பிரதேசத்தில் தரித்து நின்று இரவுச் சாப்பாட்டினை முடித்த பின்னர் இரவு 10.00 மணிக்கு மீண்டும் தொடர்ந்த பயணமானது இரவு 11.30க்கு பிலியந்தலை, 12.30க்கு தங்காலை எனச் சென்று நள்ளிரவு 1.30 மணிக்கு கதிர்காம பிரதேசத்தை சென்றடைந்து அங்குள்ள குருகெதர எனும் ஆசிரியர் விடுமுறை இல்லத்தில் அனைவரும் ஒன்றாக ஓய்வு இரவு உறக்கத்தை கழித்தோம். இந்த இடத்தை நாம் தங்குவதற்காக முற்கூட்டியே ஏற்பாடு செய்த சமாச கல்விச்சுற்றுலா ஏற்பாட்டுக் குழுவுக்கும் துணை புரிந்த தேசிய கூட்டுறவுச் சபை மொழி பெயர்ப்பாளர் திரு சலாம் அவர்களுக்கும் நன்றிகூற வேண்டும். அமைதியான உறக்கம், நல்ல காற்றோட்ட வசதி, மின்சாரம் உட்பட அடிப்படைத் தேவைகள் அனைத்துக்கும் தனித்தனி அறையும் நீர் வசதியும் கொண்ட குருகெதர தங்குமிடம் எமது சுற்றுலாவின் முதலாம் நாள் நிறைவுக்கு பூரண சுகம் தந்தது.

**சுற்றுலாவின் 2ம் நாள்**

குருகெதர தங்குமிட இல்லத்தில் இருந்து உற்சாகமாக அனைவரும் தத்தமது கடமைகளை நிறைவுசெய்துகொண்டு, காலை 8.00 மணிக்கு செல்லக்கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடுவதற்காக செல்கிறோம். 8.30 மணிக்கு அனைவரும் சிறு சிறு கூட்டங்களாக பிரிந்து

4ம் பக்கம் பார்க்க

## கல்விச் சுற்றுலா..... 3ம் பக்கத் தொடர்ச்சி

மாணிக்க கங்கையில் நீராடுகின்றோம். கதிர்காமம் மாணிக்க கங்கையின் புனிதம். இப்புனித நதியில் நீராடக் கிடைத்த வாய்ப்பு பற்றி மகிழ்ச்சியுடன் உரையாடியபடி நீராடிக்கொண்டிருந்தோம். என்னுடன் சமாச பொதுமுகாமையாளர், கல்வி உத்தியோகத்தர், கோண்டாவில் சங்க பொதுமுகாமையாளர் ஆகியோர் குளித்துமுடித்துவிட்டு கரையில் பேசிக்கொண்டிருந்தோம். ஏனையோர் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தார்கள். சரியாக மு.ப. 9.00 மணியளவில் பெண்கள் நீராடிக்கொண்டிருந்த பகுதியிலிருந்து அவலக்குரல் கேட்கிறது. திரும்பிப் பார்க்கின்றோம் சிறுவன் ஒருவன் ஆற்றில் உள்ள அகழியில் மூழ்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. செய்வதறியாது எல்லோரும் திகைத்து நின்ற தருணத்தில் மிகவேகமாக ஆற்றில் குதித்து குழியில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த சிறுவனை காப்பாற்றி அவனின் பெற்றோரிடம் ஒப்படைத்தார் எம்முடன் சுற்றுலா வந்திருந்த வேலணை சங்கப் பொதுமுகாமையாளர் திரு இராமச்சந்திரன் அவர்கள்.

நம்பமுடியவில்லை! ஒரு சிறுகணம் தவறியிருப்பினும் ஓர் உயிர் ஆற்றில் புதையுண்டிருக்கும். நாம் ஆச்சரியத்திலும் மகிழ்ச்சியிலும் திளைத்தோம். சிறுவனின் பெற்றோர் மற்றும் சகோதரர்கள் ஏக்கத்திலிருந்து விடுபடமுடியாத போதும் திரு இராமச்சந்திரன் அவர்களை "நீங்கள்தான் எங்கள் தெய்வம்" என கைகூப்பி கும்பிட்டனர். பின்னர் நாம் அந்தச் சிறுவனது குடும்பத்தினருடன் சிறிது நேரம் உரையாடினோம். இரத்தினபுரி கவத்தைப் பிரதேசத்தை சேர்ந்த சேதுராசா-பரமேஸ்வரி தம்பதிகளாகிய அவர்களின் மூத்த முதல்வனான இரத்தினபுரி தமிழ் மகாவித்தியாலய மாணவனான 16 வயதான சே.கோகிலராஜே நீரில் மூழ்கியவர் எனவும் தெரியவந்தது. "யாழ்ப்பாணத்திலிருந்து சுற்றுலா வந்த நீங்கள், ஆற்றில் மூழ்கிய எமது மகனை காப்பாற்றித் தந்ததை எங்கள் வாழ்வில் என்றுமே மறக்கமாட்டோம். உங்களுக்கு எங்களின்ரை நன்றி" எனக்கூறிய அவர்கள் தொலைபேசி இலக்கங்களை பரிமாறிக்கொண்டதுடன், எமது சுற்றுலா குழுவினருடன் சேர்ந்து புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

பின்னர் நாம் மாணிக்க கங்கைக் கரையோரம் அமைந்துள்ள செல்லப் பிள்ளையார் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு அங்கேயே எமது காலை உணவையும் முடித்துக்கொண்டு மு.ப. 10.00 மணியளவில் செல்லக் கதிர்காமத்திலிருந்து கதிரமலை கதிர்காம உச்சிமலை நோக்கி எமது பயணத்தை ஆரம்பித்தோம். கதிரமலை, வள்ளிமலை என உச்சிமலை வரை சென்று அங்குள்ள முருகப்பெருமான், புத்தபெருமான் மற்றும் சிவன் ஆலயம் என்பவற்றை தரிசித்ததோடு, மலையின் உச்சியில் இருந்து பூமாதேவியைப் பார்த்து அதன் அழகை ரசிக்கும் வாய்ப்பும் எமக்கு கிடைத்தது. பின்னர் கதிர்காமக் கந்தன் ஆலயம் சென்று தரிசித்த பின் பி.பகல் 3.00 மணிக்கு இரண்டாம் நாள் மதிய உணவை நிறைவு செய்துகொண்டு, கொழும்பு நோக்கிய எமது பயணம் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை அதிவேக பாதை ஊடாக வந்து இரவு 10.00 மணிக்கு கொழும்பு நகரில் உள்ள கூட்டுறவு இல்லத்தினை அடைந்து உறக்க ஓய்வுக்காக தங்கினோம். அன்று இரவுநேர உணவினை பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு க.நடராசா ஆசிரியர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். உணவினை உண்டுவிட்டு இரவு 11.00 மணியளவில் அனைவரும் உறக்கத்துக்குச் சென்றோம். கூட்டுறவு இல்லம் எல்லா வசதியும் கொண்டதாக அமைந்திருந்தது.

### சுற்றுலாவின் 3ம் நாள்

13.02.2015 வியாழன், காலைப் பொழுது புலர்ந்தது. சுற்றுலாவின் 3ம் நாள் மட்டுமல்ல இறுதி நாளுமாகும். எல்லோரும் விழித்துக்கொண்டு தமது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு காலை 8.00 மணியளவில் கூட்டுறவு இல்லத்தில் இருந்து புறப்பட்டு 8.45 மணிக்கு தெகிவளை மிருகக் காட்சி சாலையை சென்றடைந்தோம். சிறுவர்களோடு சிறுவர்களாக நாமும் மகிழ்ச்சியுடன் மிருகக் காட்சிச் சாலையில் உள்ள மிருகங்களை கண்டு களிப்பதற்காக உள்ளே சென்று ஒவ்வொரு அலகாக பார்த்துக்கொண்டு சென்றோம். நேரம் கடந்ததே தெரியவில்லை. மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணிவரை அங்கேயே எமது பொழுது கழிந்துவிட்டது. பின்னர் காலிமுகத்திடலில் அன்றைய மதிய உணவினை முடித்துக்கொண்டோம். கோல்பேஸ் கடற்கரையில் சிறிதுநேரம் பொழுதைக் கழித்த நாம், பி.ப. 3.30 மணிக்கு எமது பயணத்தை தொடர்ந்தோம். மாலை 6.00 மணிக்கு வென்னப்புவ பலநோக்கு கூட்டுறவுச் சங்க காரியாலயத்தை அடைந்தோம். அங்கே எம்மை சங்கத்தின் தலைவர், பொதுமுகாமையாளர் உட்பட பணியாளர்கள் மிகவும் உற்சாகத்துடன் வரவேற்றனர். சுற்றுலாதாரிகள் இலங்கையிலேயே மிகவும் வெற்றிகரமாக இயங்குகின்ற வென்னப்புவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளை பார்த்தும் கேட்டும் அறிந்துகொண்டனர்.

வென்னப்புவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு ய.லலித் பீரிஸ் அவர்களுடன் எமது சுற்றுலா ஏற்பாட்டாளர்களான சமாசத்தினர் கலந்துரையாடலை நடத்தியபின் அங்கு எமக்கு அளிக்கப்பட்ட உபசரணையையும் பெற்றுக்கொண்டு மேற்படி சங்கத்தின் கிராமிய வங்கி, கூட்டுறவுநகர் (Co-op City) ஆகியவற்றின் செயற்பாடு பற்றியும் கேட்டறிந்துகொண்டு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டதுடன் எமது மூன்று நாள் சுற்றுலாவினையும் முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தை இரவு 8.00 மணியளவில் ஆரம்பித்தோம்.

இடையிலே மாதம்பை முருகன் கோயில், பிரசித்திபெற்ற சிலாபம் முன்னேஸ்வரம் சிவன் கோவில் என்பவற்றையும் தரிசித்துக்கொண்டு இரவுவேளை மதவாச்சி சந்தையில் எமக்கு வேண்டிய பழங்கள் பண்டங்களை கொள்வனவு செய்துகொண்டு எமது பயணத்தை ஆரம்பித்த நாம், 14.02.2015 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் சமாச பணிமனைக்கு வந்து அவரவர் வீடுகளுக்கு புறப்பட்டு சென்றதுடன் எமது கல்விச் சுற்றுலா இனிதே நிறைவடைந்தது.

இந்தப் புதிய அனுபவத்தை எமக்கு தந்த இச்சுற்றுலாவிற்கு வழிகாட்டி உதவிய திரு குருபரன் அவர்களுக்கும், தங்குமிட வசதிகள் செய்த திரு சலாம் அவர்களுக்கும் மட்டுமன்றி மொத்தத்தில் இவ்வாறான ஒரு இனிமையான சுற்றுலாவினை ஏற்பாடு செய்த சமாசத்துக்கும் எமது நன்றிகள்.

இவ்வாறான சுற்றுலாக்கள் எதிர்காலத்தில் இன்னும் பயனுடையதாக அமையவேண்டுமாக இருந்தால் எமது சுற்றுலாவின்போது நாம் துறைசார்ந்த உற்பத்தி தொழிற்சாலைகள், அதாவது தகரப்பேணிகள், போத்தல்களில் பழரசம் மற்றும் சாற்று உற்பத்திகளை பொதி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் நவீனமான முறையில் தொழிற்பாடுகளையும் சேவைகளையும் மேற்கொள்ளும் நிறுவனங்களை சென்று பார்வையிட்டு அவை தொடர்பில் அறிந்து கொள்ளுதல் மிக்வும் நன்மை பயக்கும்.

# "பிற்போடப்படும் நீதியான கோரிக்கைகள் மறுக்கப்படுவதிலும் பார்க்க மோசமானது"

## பனைசார் நிறுவனங்களின் ஸ்தாபகர் க.நடராசா ஆசிரியர்

வட இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் கோரும் சம்பள உயர்வு மிகவும் நியாயமானது. "பிற்போடப்படும் நீதியான கோரிக்கைகள் மறுக்கப்படுவதிலும் பார்க்க மோசமானது" என்ற தத்துவம் இத்தருணத்தில் மனதில் கொள்ளப்பட வேண்டும்.

பனைசார் நிறுவனங்களின் ஸ்தாபகரும் பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவருமான திரு க.நடராசா ஆசிரியர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூட்டுறவுத்துறை மூலம்தான் பின் தங்கிய ஒரு சமுதாயம் தமிழர் மத்தியில் தலை நிமிர்ந்து வாழ்கின்றது என்ற உண்மையும் உணரப்பட வேண்டும். உணவு போன்ற அத்தியாவசிய சேவைகளிலும் கூட்டுறவு ஊழியர்களே மிகவும் குறைந்த ஊதியத்துடன் மனிதாபிமான சேவைகளையும் செய்து வருகின்றனர்.

1975ம் ஆண்டு சர்வதேச ரீதியில் எடுக்கப்பட்ட கணிப்பின்படி வடமாகாணத்தில் இயங்கிவந்த கூட்டுறவுச் சங்கங்களே முதன்மையானவை என்று அறிவிக்கப்பட்டது. அந்த நல்ல செய்தியை அப்போது கூட்டுறவு அமைச்சராகவிருந்த மாண்புமிகு ஹேரத் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு நேரில் வந்து அப்போதைய கூட்டுறவு சமாசத்தின் தலைவராகவிருந்த கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் காலம்சென்ற திரு ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையில் வட பகுதியிலுள்ள கூட்டுறவு முக்கியஸ்தர்களை அழைத்து அந்தச் செய்தியை பெருமையுடன் அறிவித்தார்.


மக்களின் பிர்சசினைகளையும் தேவைகளையும் மேலும் நுணுக்கமாகத் தெரிந்துகொள்ளும் வல்லமைபடைத்த வடமாகாண முதலமைச்சர் மாண்புமிகு விக்கினேஸ்வரன் ஐயா அவர்கள் இந்த விடயத்தில் உடனடியாக கவனமெடுத்து நியாயமான இந்த சம்பள உயர்வை வழங்கவேண்டும் என்று பனம் பொருள் கூட்டுறவு ஸ்தாபனத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்து வெற்றிகண்ட ஒருவன் என்ற வகையில் உரிமையுடன் இந்த கோரிக்கைக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொருத்தமான ஒரு காலகட்டத்தில் மதிப்புக்குரிய திரு ஐங்கரநேசன் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கு பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டமை இந்த ஊழியர்களில் தங்கியுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு மிக நல்ல செய்தியாக அமைகின்றது.

குறுகிய காலமென்றாலும் பொறுமையுடன் கூட்டுறவுத் துறையை கவனித்துவரும் மாகாண சபை உறுப்பினர் திரு சயந்தன் அவர்கள் முன்னிலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் இதற்கான நியாயங்களையும் ஆதாரங்களையும் மாநாட்டில் வற்புறுத்தியுள்ளனர் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன். என்றுள்ளது.

## சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்விச்சுற்றுலாவின்போது பிழக்கப்பட்ட படங்கள்








# நிகழ்வுகளின் நிழல்கள்

கூ.அ.உ.ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களுக்கா ன சேவைநலன் பாராட்டு
மற்றும் புதிய உதவி ஆணையாளர் திரு சு.கணேஸ் அவர்களுக்கான வரவேற்புவிழாவின் பதிவுகள்



## பணியாளருக்கு ........ 1ம் பக்கத் தொடர்ச்சி

இம்மாதம் 15ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கூட்டுறவு அமைச்சருடன் வடமாகாண சபை உறுப்பினர்களான திரு அ.பரஞ்சோதி, திரு வே.சிவயோகம் ஆகியோருடன், பனை தென்னை வள நிறுவனங்களின் ஸ்தாபகரும் பனை அபிவிருத்திச் சபையின் முதலாவது தலைவருமான திரு க.நடராசா மற்றும் வடமாகாணத்திலுள்ள மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிமுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் சபை உறுப்பினர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சங்கங்களின் பிரதிநிதிகள் தமது சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூறினர்.

இங்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மேலும் தமது உரையில், இவ் அங்கத்தவர்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியவர்கள் ஆவர். நான் கூட்டுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற நாளிலிருந்து இவ்வளத்தை முழுமையாக நம்பிவாழும் இக்கூட்டுறவு அங்கத்தவர்களுக்கு ஏற்ற நல்ல செயற்திட்டங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளேன். இவ்வளம் முழுமையாக பயன்படுத்தப்படுவதோடு நவீன முறையில் பொதி செய்வதற்கும் பொருட்களை தரப்படுத்துவதற்கும் எதிர்காலங்களில் வடக்கு மாகாண சபை உதவி செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பனைத் தொழில் செய்யும் போது மரத்தால் தவறி வீழ்ந்து மரணிக்கும் அங்கத்தவர்களின் குடும்பத்துக்கு தலா ஒரு இலட்சம் ரூபா எமது அமைச்சிலிருந்து வழங்குவதற்கு தீர்மானித்துள்ளேன். இக்கொடுப்பனவு 2013ம் ஆண்டிலிருந்து இன்றுவரைக்குமான காலப் பகுதிக்குள் மரணமடைந்தவர்களுடைய விபரங்களை உரியவர்கள் தமது பகுதி சமாசம் மற்றும் இணையம் ஊடாக எமது அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வடமாகாணத்தில் செயற்படுகின்ற கூட்டுறவு அமைப்புக்களில் பணிபுரியும் கூட்டுறவு ஊழியர்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாகிய சம்பள உயர்ச்சியை தை மாதத்திலிருந்து 30 வீதத்தால் அதிகரித்து வழங்க எனது அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்த அவர், எதிர்காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களை மாவட்ட ரீதியாக நடத்த வேண்டும் என்ற சங்கங்களின் தலைவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவ்வாறான கலந்துரையாடலை நடத்துவதற்கு தான் ஒழுங்கு செய்வதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களுக்கும் விருந்தினர்களுக்கும் பனைசார் உபஉணவு வகைகளான பதநீர், புழுக்கொடியல், லட்டு என்பன சமாசத்தால் வழங்கப்பட்டமையை அமைச்சர் அவர்கள் மிகவும் பாராட்டியமை சிறப்பம்சமாகும்.

## சேவைநலன் ........ 2ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்த்து மடலினை கோண்டாவில் சங்க முன்பள்ளி ஆசிரியை திருமதி மன்றோமக்ரலின் அவர்கள் வாசித்தளித்தார். யாழ். மாவட்ட பனை தென்னை வள கூ.நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிச் சங்கம் சார்பாக அதன் தலைவர் திரு சு.சிறிகாந் அவர்களால் வாழ்த்துமடல் வாசித்தளிக்கப்பட்டது. தொடர்ந்து சமாசத் தலைவர், கொத்தணிகள், சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையாளர்கள் கடந்த 5 ஆண்டுகளாக யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக சிறப்பாக கடமையாற்றிய உதவி ஆணையாளரை பாராட்டி தமது கருத்துரைகளை வழங்கினர்.

இதனைத் தொடந்து தனது ஏற்புரையை நிகழ்த்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள், "கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைய சமூக, பொருளாதார, கலாச்சார, கல்விசார் நடவடிக்கைகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்ட, செயற்பட்டுவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் ஆகியவற்றின் தலைவர்கள், அவர்கள் சார்ந்த நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், பொதுமுகாமையாளர்கள், அவர்கள் சார்ந்த பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சங்கங்கள், கொத்தணிகள், சமாசத்தின் செயற்திட்டங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அதாவது முன்பள்ளிக் கூடங்கள், கல்விப் பயிற்சி நெறிமுறைகள், சத்துணவுத் திட்டம், அங்கத்தவர், பணியாளர்கள் விபத்துநலத் திட்டம், நடமாடும் சித்த மருத்துவ சங்கச் சேவைகள், அங்கத்தவர், பணியாளர் ஓய்வுநலத்திட்டம், மருத்துவ நலத்திட்டம் என பல வகையான சமூகநல திட்டங்களை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் செயற்படுத்தி வருகின்றீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இன்று யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களின் நலன்கருதி எவருமே சிந்திக்காத சகாயநல நிதித் திட்டத்தினை ஆரம்பித்துள்ளீர்கள். கூட்டுறவாளர்கள் மத்தியிலும், சமூக மத்தியிலும் நீங்கள் உயர்ந்து நிற்கின்றீர்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

கூட்டுறவில் பல உயிரிழப்புக்கள், இடையூறுகள், இன்னல்கள் வந்தபொழுதிலும் "தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும்" என்ற கூற்றுக்கு அமைய தங்களின் இதயசுத்தியான சேவை மேலும் தொடரவும் கூட்டுறவு கொள்கைகளுக்கு அமைய சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி சார் நடவடிக்கைகளில் 8ம் பக்கம் பார்க்க

# பெப்ரவரி மாதம் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது!

வடமாகாண சமாசம் தனது சமூக மேம்பாட்டு கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கல்விச் சுற்றுலா ஒன்றை கடந்த மாதம் 10, 11, 12ம் திகதிகளில் மேற்கொண்டிருந்தது. இதில் 25ற்கு மேற்பட்ட பனை தென்னை வள சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இச்சுற்றுலாவின்போது இலங்கையிலேயே மிகவும் சிறந்த கூட்டுறவு நிறுவனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் வென்னப்புவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நேரடியாக சென்று அச்சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் பார்வையிட்டதோடு தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பணியாளர்களோடு கலந்துரையாடி சுற்றுலா குழுவினர் பயன்பெற்றுள்ளனர்.

மேலும் தென்னிலங்கையில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற சிலாபம் முனீஸ்வரம், கதிர்காமம் போன்ற ஆலயங்களையும் புராதன சின்னங்களான அநுராதபுரம் ஆயிரங்கால் மண்டபம், சிகிரியா, கொழும்பு மிருகக்காட்சிச்சாலை ஆகியவற்றையும் பார்வையிடக் கூடிய வாய்ப்பையும் சமாசம் ஏற்படுத்திக் கொடுத்தள்ளது. இத்திட்டத்தினை வருடந்தோறும் செயற்படுத்த சமூக மேம்பாட்டு கல்வி அபிவிருத்திக் குழு தீர்மானித்துள்ளது.

## கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான கல்விப் பயிற்சி!

சமாசம் தனது கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இம்மாதம் வேலணை சங்கத்தின் சகல பணியாளர்களுக்குமான கல்விப் பயிற்சி இம்மாதம் 21ம் திகதியும், ஊர்காவற்றுறை சங்கத்தில் 23ம் திகதியும், 26ம் திகதி சுன்னாகம் சங்கத்திலும், 28ம் திகதி மானிப்பாய் சங்க முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், 31ம் திகதி மானிப்பாய் சங்கத்தின் பணியாளர்களுக்குமான கல்விப் பயிற்சிகளை நடத்தியும் நடத்தவும் உள்ளதாக சமாச கல்வி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

## சகாய நிதியத் திட்டம்....

-1ம் பக்கத் தொடர்ச்சி-

ஆகியோர் எதிர்பாராத விபத்து பாதிப்புக்கு உட்பட்டு இறக்க நேரிடின் அவரில் தங்கிவாழும் குடும்பத்திற்கு நிதி உதவி புரிந்து அவர்களின் வாழ்வாதார நெருக்கடியை ஓரளவு குறைப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இத்திட்டத்தில் பின்வரும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் தமது பங்களிப்பைச் செலுத்தி இணைந்துள்ளன.

தெல்லிப்பளை, அச்சுவேலி, அரியாலை, யாழ்ப்பாணம், வலிகாமம் கொத்தணி, சமாசம் என்பன தமது பங்களிப்பு நிதியைச் செலுத்தி இத்திட்டத்தில் பூரணமாக இணைந்துள்ளன. ஏனைய இவ்வகை நிறுவனங்களும் தமது பங்களிப்பினை இம்மாத முடிவுக்குள் செலுத்தி உதவுமாறு சமாசம் கேட்டுள்ளது.

## சேவைநலன பாராட்டு.......

-7ம் பக்கத் தொடர்ச்சி-

மேலும் மேலும் உயர்வடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக்கொள்வதுடன், என்னையும் எனது துணைவியாரையும் உங்களில் ஒருவராக அழைத்து பெருமனதுடனும் பெருமையுடனும் கௌரவித்த உங்கள் அனைவருக்கும் பற்பல நன்றிகள் கூறி, பல்லாண்டு தங்கள் பணி சிறக்க மனதார வாழ்த்தி எனது இரத்தத்தின் இரத்தமாக கலந்து நிற்கின்ற உங்களுக்கு மீண்டும் பல நன்றிகள் கூறி எனது ஏற்புரையை நிறைவு செய்கின்றேன். நன்றி!" என உணர்ச்சிப் பெருக்குடன் தனது உரையை நிறைவுசெய்தார்.


எமது வியாபார நடவடிக்கைகள்

- கள் கொள்வனவு, விற்பனை
- நிழற்படப் பிரதியாக்கல்
- போத்தற் கள் உற்பத்தி, விற்பனை
- சுவையுணவு விற்பனை



எமது வாடகைச் சேவைகள்

❖ வாகனம்



❖ கதிரை



❖ கட்டடம் (கடை)

எமது நலத்திட்டங்கள்

➤ அங்கத்தவர், பணியாளர்களுக்கான ஒய்வூதிய திட்டம்

➤ அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்பு

➤ கடன் வழங்கல்



➤ கிராமிய வங்கி சேவை



➤ பாலர் பாடசாலைகளை இயக்குதல்

➤ பொது நிகழ்வுகளுக்கும், பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கும் அன்பளிப்பு வழங்கல்.

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தொலைபேசி: 021 223 0395


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2015ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.